# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் :07

தமிழ்மொழியும் இலக்கியமும்

சுட்டெண் ..............................................................

நேரம் : 2.00 மணி

### பகுதி - I

❖ **மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. "சேர மன்னன் பார் போற்ற ஆட்சி செய்தான்". என்பதில் பார் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
   1. சபை　2. பூமி　3. காடு　4. சுற்றம்

2. பாரதியார் பாடல்களில் உற்சாகம் கரை புரண்டு ஓடும். இங்கு உற்சாகம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. இறுமாப்பு　2. வீரம்　3. சோம்பல்　4. துணிவு

3. களிறு என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?
   1. பிணை　2. நாகு　3. பசு　4. பிடி

4. தமிழில் உள்ள நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை
   1. 95　2. 07　3. 126　4. 144

5. பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்துக் கொண்ட சொல்
   1. ஸ, ட　2. ஐ,ந　3. ஹ, ஸ்ரீ　4. த,ஷ

6. கணவன், இறைவன், வீடு ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   1. தலைவன்　2. பதி　3. நட்பு　4. அரசன்

7. பின்வருவனவற்றுள் ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவாக அமையும் சொல்
   1. பாங்கி　2. நீதிபதி　3. குறவன்　4. தேவி

8. அவள் கொழும்புக்குப் போனாள். என்பது
   1. நிகழ்காலம்　2. இறந்த காலம்　3. எதிர்காலம்　4. கூறமுடியாது

9. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. வெள்ளிவிழா　2. பொன்விழா　3. மணிவிழா　4. அமுதவிழா

10. ஆந்தை அலறும் என்பது போல குரங்கு
    1. உறுமும்　2. அலட்டும்　3. கத்தும்　4. அலப்பும்

11. உறவுமுறைக் கடிதம் ஒன்றில் இடம்பெறாத உறுப்பு
    1. ஒப்பம்　2. தலைப்பு　3. விளிப்பு　4. செய்தி

12. கடலும் கிணறும் என்ற சிறுகதையின் ஆசிரியர்
    1. கி.வா.ஜகநாதன்　2. குப்புசாமி ஆழ்வார்　3. நெ.நு.சுந்தரவேலு　4. அழகசுந்தரதேசிகர்

13. கூறமுடியாத நிலையிலிருத்தல் என்பதை விளக்கும் உவமைத்தொடர்
    1. கடன்பட்டார் நெஞ்சம் போல　2. கனியிருக்கக் காய் கவர்ந்தாற் போல
    3. ஊமை கண்ட கனவு போல　4. வாடும் பயிருக்கு வான் மழை போல



kalvi.lk

14. புதிய ஆத்திசூடியைப் பாடியவர் யார்?
1. ஔவையார் 2. பாரதியார் 3. காளிதாஸன் 4. இளங்கோ

15. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன
1. 144 2. 133 3. 1330 4. 150

16. பென்சிலுக்கான மரக்குற்றிகள் பெறப்படும் மரம்
1. தேக்கு 2. பைன் 3. இறப்பர் 4. கருங்காலி

17. இரும்பொறை வேந்தனது இனிய செயல் என்னே. இதில் இட வேண்டிய நிறுத்தக்குறி
1. அரைப்புள்ளி 2. வினாக்குறி 3. முற்றுப்புள்ளி 4. வியப்புக்குறி

18. பின்வருவனவற்றுள் கேட்போனைச் சுட்டும் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்
1. தன்மைப்பெயர் 2. முன்னிலைப்பெயர் 3. படர்க்கைப்பெயர் 4. தொழில்பெயர்

19. ஈமெயில் (E-Mail) என்பதன் கலைச் சொல்
1. இணையம் 2. தொலைநகல் 3. மின்னஞ்சல் 4. கணினி

20. பின்வருவனவற்றுள் இரட்டைமொழியாக அமைவது
1. ஒழிப்பு மறைப்பு 2. மடமட 3. தட்டுத்தடுமாறி 4. பெரிய பெரிய

(20x1½=30 புள்ளி)

## பகுதி - II

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.
1. சூழலைப் பாதுகாப்போம்
2. உழவுத் தொழிலின் சிறப்பு
3. புத்தகத்தின் சுயசரிதை
4. நான் விரும்பும் பெரியார்

(16 புள்ளி)

02. அறம் செய்வதால் கிடைக்கும் பயன்கள் பற்றி 75 சொற்களில் அமையுமாறு உமது நண்பனுக்கு கடிதம் எழுதுக.

(15 புள்ளி )

03. பின்வரும் பாடலை நன்கு வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

தென்னை மரக்கிளை மீதில் - அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
சின்னஞ்சிறிய குருவி - அது
"ஜிவ்" என்று விண்ணிடை ஊசல் சிட்டேகும்
மன்னப் பருந்தோரிரண்டு - மெல்ல
வட்டமிட்டுப் பின் நெடுந்தொலை போகும்

பின்னர் தெருவிலோர் சேவல் - அதன்
பேச்சிலே "சக்திவேல்" என்று என்று கூவும்
செவ்வொளி வானில் மறைந்தே - இறந்தே
நிலவெங்கும் பொழிந்தது கண்டீர்.

பாரதியார்

Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

1. பசுங்கிளி எங்கே கீச்சிட்டுப் பாய்கின்றது?
2. குருவி எங்கே செல்கிறது?
3. சேவல் எவ்வாறு கூவுகின்றது?
4. இங்கு இடம்பெற்றுள்ள அடுக்கிடுக்குத் தொடர் ஒன்று தருக?
5. பிரித்தெழுதுக
   1. மரக்கிளை 2. நிலவெங்கும்

(10 புள்ளி)

04. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.
   1. வெள்ளம்
   2. மேகம்
   3. நட்பு
   4. அரசன்
   5. வேலை

(5 புள்ளி)

05. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
1. வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட மன்னன் யார்?
2. தாயினும் நல்ல தயைவுடைய நல்லாள் யார்?
3. சிகாமணிக்கு ஏற்பட்ட சந்தேகம் என்ன?
4. பொய் சொல்லாதே பாட அலகு கற்றுத்தரும் படிப்பினைகள் எவை?
5. பிள்ளை அழுவதால் பாலுக்கு எலி யாரிடம் சென்றது?
6. பின்வருவனவற்றின் பொருளை எழுதுக.
   1. மானம் போற்று -
   2. புதியன விரும்பு -

(6x4 = 24 புள்ளி)

Education கல்வி அධ්‍යාපන

Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 7**

**FREE ADMISSION**

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- Spoken English Classes.
- Sinhala Reading and Writing Classes.
- Map Marking Classes

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page